என்ற தெளிவான கொள்கை உடையது திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த விளக்கத்தின் மூலமாக நான் கர்நாடக முதலமைச்சருக்கும், கர்நாடகத்திலே இருக்கின்ற மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வணக்கம்.

முற்பகல் 11-25

(இ) மாண்புமிகு முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அளித்துள்ள கூடுதல் உணவு தானிய ஒதுக்கீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு சிறப்பு ஒதுக்கீடாக அரிசி ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்டு உடனடியாக அந்த அரிசி தமிழகத்திற்கு வழங்கப்பட்டதாக கேள்வி நேரத்தின்போது நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு எவ்வளவு அரிசி தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்ற தகவலையும் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலிருந்து நேற்றைக்கு முன்தினம் நான் திரும்பிய செய்தி உங்களுக்கெல்லாம் தெரியும். நேற்றைக்கு முன்தினம் நான் டெல்லியிலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்தபோது, தமிழ்நாட்டின் அரிசித் தேவையை எடுத்துச் சொன்னேன். அவர்கள் அதைப் பற்றிக் கவனிப்பதாகக் காலையிலே சொன்னார்கள். நான் நேற்றைய முன்தினம் மாலையில் இங்கு வந்து சேர்ந்தேன். நான் வருவதற்கு முன்பாகவே, அரிசி அனுப்பப்பட்டது என்ற செய்தி இங்கே வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அரிசி எவ்வளவு வந்தது என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். மொத்தமாக வந்தது 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் அரிசி; 65 ஆயிரம் டன் கோதுமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)